# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2421/09 - 2025 ජනවාරි මස 29 වැනි බදාදා - 2025.01.29

*2421/09 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***ச.வ.பி. 14/2024***

**2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம்**

4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம், இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள், அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவுகளிலுள்ள பட்டியலிடப்பட்ட பிரிவுகளில் வழங்கப்பட்டவாறாக திறைசேரி செயலாளருக்கு இத்தால் கையளிக்கின்றேன்.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

கொழும்பு,
*23 சனவரி 2025.*


1A - G 43614 — 05 (2025/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| | *கையளிக்கப்பட்ட தத்துவங்கள்* | *எப்பிரிவின் கீழ் அத்தகைய தத்துவம் அளிக்கப்பட்டதோ அப்பிரிவு* |
| 1. | நிதி செயல் நுணுக்க கூற்றினைத் தயாரித்தல் | 11 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு |
| 2. | அடுத்துவரும் நிதியாண்டு மற்றும் அடுத்துறும் நான்கு நிதியாண்டுகள் என்பவற்றுக்கான இடைக்கால நிதி கட்டமைப்பினைத் தயாரித்தல் | 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு |
| 3. | வருடாந்த அடிப்படையொன்றின் மீது தனிசு நிலைபெறுதன்மை பகுப்பாய்வொன்றினைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் | 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு |
| 4. | 2024 ஆம் ஆண்டு ஓகத்து 8 ஆந்தேதியன்று ஏலவேயுள்ளதான செலவின அர்ப்பணிப்புகளின் நிலுவையை தொடர்ச்சியாக குறைப்பதற்கான செயல்நுணுக்க விடுவிப்பொன்றைத் தாபித்தல், மற்றும் நிலுவைகளின் திரட்டுகையை தடுப்பதற்கான நுட்பங்களை விரிவுபடுத்துதல்; | 29 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு |
| 5. | பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படாத பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டம் உள்ளடங்கலாக பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டமொன்றுக்கு ஏதேனும் ஒதுக்கீடு வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினூடாகச் செய்யப்படுதலாகாது என்பதனை உறுதிப்படுத்துதல். | 42 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு |
| 6. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் என்பனவற்றின் அரசிறைகள் மற்றும் செலவினங்கள் மற்றும் ஏனைய நிதிசார் தகவல்கள் பற்றிய அறிக்கைகளைக் கோருதல். | 62 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு |

EOG 01 - 0297

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.